பின்னிணைப்பு (ஆ)

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை - செயலாற்றுகை அறிக்கை - 2016

1. நிறுவனத்தின் செயலாற்றுகை தொடர்பான சுருக்கம்

1.1 மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்களை பயன்படுத்தியதனால் மொத்தம் 1,169 ஜி.வொ.ம. அளவான மின்சக்தி உற்பத்தி செய்யப்பட்டது. 199 கருத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன..

1.2 தற்காலிக அனுமதிப் பத்திரங்களும் (PA) மின்சக்தி அனுமதிப் பத்திரங்களும் விநியோகிக்கப்பட்ட சகல கருத் திட்டங்களினதும் முன்னேற்றம் காலாண்டு ரீதியில் கண்காணிக்கப்படுகின்றது. பிரச்சினைகளுக்கு தீர்வுகாணுவதற்கும் உதவிகள் வழங்கப்படுகின்றன.

1.3 மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்களின் நிமித்தம் ஒரு வழிகாட்டல் வரைபை நிர்மாணிக்கும் பொருட்டு உள்ளீடுகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் சூரிய சக்தி, காற்று சக்தி, சிறிய நீர்வலு, உயிரணுத் திணிவுச் சக்தி, கடல் அலை சக்தி, விவாசயக் கழிவுகள் மூலமான சக்தி, நகர திண்மக் கழிவுகள் மூலமான சக்தி முதலிய வகையான சக்தி வளங்கள் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், அனல் சக்திக் களஞ்சிய முறைமை போன்ற எதிர்கால தொழில் நுட்பங்களின் நிமித்தமும் வளங்கள் மதிப்பாய்வு தொழில் நுட்ப மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1.4 கிராமிய மக்களுக்கும், வீட்டுத் தேவைகளுக்கும், சிறு மற்றும் நடுத்தரளவான கைத்தொழில்களுக்கும் மற்றும் விவசாயத் துறைக்கும் விநியோகிக்கப்படும் மின்சக்தி சார்ந்த சேவைகளை மேம்படுத்தும் நிமித்தம் கீழ்காணும் கருத் திட்டங்களினூடாக இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை (இ.நி.வ.அ.ச.) தலையீடு சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

1.4.1 தேசிய மின்சார வலையமைப்புக்கு அணுகு பிரவேசம் அற்ற உரிய பிரதேசங்களுக்கு மின்சாரத்தைப் பெற்றுக் கொடுத்தல் (நிலைபெறு தகு ஒளி).

1.4.2 சிறு மற்றும் நடுத்தர அளவான கைத்தொழில் துறை மற்றும் கிராமிய கைத்தொழில் துறை ஆகிய துறைகளுக்கு மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி (RE) தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தல்.

1.4.3 இலங்கை மின்சார சபை (இ.மி.ச.), மற்றும் லெகோ (LECO) கம்பனி ஆகியவற்றின் உரிய ஒத்துழைப்பில் 'சூரியபள சங்கிராமய' எனும் எண்ணக்கருவை செயற்படுத்துதல்.

1.4.4 அடிப்படையான சக்தித் தேவைகளின் நிமித்தம் காணப்படுகின்ற தொழில் நுட்ப முறையியல்களை மதிப்பிடுதல், மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி (RE) தீர்வுகளை அறிமுகப்படுத்துதல் (பிராந்திய ரீதியான உயிர் வாயு உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம்)

1.5 ஆசிய அபிவிருத்தி வங்கியால் (ஆ.அ.வ.) நிதியிடப்பட்டுள்ள இரண்டு பிரதான மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி (RE) கருத் திட்டங்களை செயற்படுத்துதல்.

1.5.1 சூரிய சக்திப் பலகை முறைமையைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்யும் கருத் திட்டம்:

குறித்த இந்தக் கருத் திட்டத்தின் கீழ் இலங்கையில் பிரகடனப்படுத்தப் பட்டுள்ள மின் வோல்ட்டை அடிப்படையாகக் கொண்டமைந்த மின் உற்பத்தியை மேம்படுத்துதல் மற்றும் பிரபல்லியப்படுத்துதல் ஆகிய நோக்கங்களில் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையினால் (இ.நி.வ.அ.ச.) அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் சூரிய சக்தி PV

முன்னோடிக் கருத் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. அரச துறை நிறுவனங்களின் நிமித்தம் பல்கலைக்கழகப் பொறியியல் பீடங்கள் அடிப்படை ரீதியில் இலக்குக் கொள்ளப்பட்டுள்ளன. இந்தக் கருத் திட்டத்தின் கீழ் நிறைவு செய்யப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- ✓ தேசிய மின்சார வலையமைப்புக்கு 200 kWp மின்சக்தியை சேர்க்கும் நிமித்தம் பேராதெனியப் பல்கலைக்கழகம் மற்றும் மொரட்டுவப் பல்கலைக்கழகம், ருஹுணுப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் முதலிய பல்கலைக்கழகங்களில் 4 சூரிய சக்தி PV முறைமைகளை நிறுவுதல்.
- ✓ தேசிய மின்சார வலையமைப்புக்கு 800 kWp மின்சக்தியை சேர்க்கும் நிமித்தம் தனியார் துறை நிறுவனங்களில் சூரிய சக்தி சார்ந்த 11 PV முறைமைகளை நிறுவுதல்.

1.5.2 தோட்டத் துறை மின்சாரப் புனர்நிர்மாணம் மற்றும் மீள்சக்தியூட்டல் கருத் திட்டம்:

இந்தக் கருத் திட்டத்தின் கீழ் வத்தளை ப்ளான்டேஷன் பிஎல்சி எனும் கம்பனிக்கு சொந்தமான ஸ்ட்ரான்டென் தோட்டத்தில் கைவிடப்பட்டுக் கிடந்த 50 kWp ஒரு நுண் நீர் மின்வலு கருத் திட்டம் புனர்நிர்மாணிக்கப் பட்டது.

UNDP/GEF/FAO நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ள ‘நிலையான உயிரணுத் திணிவுச் சக்தி உற்பத்தி மற்றும் நவீன உயிர் எரிவாயு சக்தித் தொழில் நுட்பங்களை ஊக்குவித்தல்’ மற்றும் ‘இலங்கை சக்தி உற்பத்தியிலும் பாவனையிலும் தகனமடையும் வாயுட்களை குறைத்தல்’ தொடர்பான நடவடிக்கை என்ற தலைப்பில் கருத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இ.நி.வ.அ.ச. இந்தக் கருத் திட்டங்களை செயற்படுத்தல் தொடர்பான ஒழுங்குறுத்தும் நிறுவனமாக தொழிற்படுகின்றது.

2016 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டத்தின் விஷேடத்துவங்கள் - பிரதான செயற்பாடுகள்

- அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்று மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி தொடர்பில் அமைச்சுகளின் அதிகாரிகளுக்கு இடையில் ஒரு குழுவை நியமித்தல்.
- உயிரணுத் திணிவுச் சக்தித் துறைக்கு உதவும் நிமித்தம் மிகவும் முக்கியமான கொள்கைத் தீர்மானங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் திட்டங்களைத் தயாரித்தல்.
- உயிரணுத் திணிவுச் சக்தி முனையங்களையும் மற்றும் செய்மதி மூலமான மின்சார விநியோக முறைமைகளையும் தாபித்தல்.
- எரிவிறகுகளை விநியோகிக்கும் கைத்தொழில்களின் நிமித்தம் பயன்தகு கொள்கைகளும் மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவு முறைகளும் தொடர்பான சிபாரிசுகளை வரைந்து வழங்குதல்.
- எரிவிறகுத் தாவரங்களை பயிரிடும் மாதிரிகளை தொடர்ந்தும் தாபிக்கச் செய்தல்.
- நிலையாக உற்பத்தி செய்த எரிவிறகுகளுக்கான தகவுதிறன்கள் மற்றும் சுட்டிகள் என்பவற்றை வெளியிடுதல்.

- கட்டம் II இன் கீழ் தொழில் நுட்பக் கண்காட்சிக் கருத் திட்டம் - இந்தக் கருத் திட்டங்களை தொடர்ந்தும் மேற்கொண்டு நிறைவு செய்தல்.
- பயிற்சி நிகழ்ச்சித் திட்டம், விழிப்பூட்டுகின்ற நிகழ்ச்சித் திட்டம் மற்றும் ஊடகப் பிரசார நிகழ்ச்சித் திட்டம் முதலிய நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல் மற்றும் தொழில் நுட்பக் கண்காட்சிகள் பற்றிய அறிக்கை மைய வீடியோ ஒலிநாடாக்களை தயாரித்தல்.

1.5.3 'இலங்கையின் மின்சக்தி உற்பத்தியிலும் பாவனையிலும் எரிதகனம் அடையும் வாயுட்களை குறைக்கும் நடவடிக்கை தொடர்பான கருத் திட்டம் (NAMA);

- எதிர்பார்த்த தேசிய ரீதியில் நிர்ணயிக்கப்பட்ட (Intended Nationally Determined Contribution -INDCs) பங்களிப்புகளின் நிமித்தம் உகந்த கண்காணிப்பு, அறிக்கையிடுதல், உறுதிசெய்தல் (Monitoring, Reporting, Verification - MRV) தொடர்பான ஒரு பொறிமுறையாகவும் மற்றும் NDC களை பூர்த்தி செய்வதற்கான கருத் திட்டங்களை செயற்படுத்தும் வகையில் நிதிகளை பெற்றுக் கொள்வதற்கான தேவைகளை பதிந்து கொள்வதற்கு ஆதரவளிக்கக் கூடிய ஒரு கருத் திட்ட நிதியியல் பொறிமுறையாகவும் பயன்படுத்தக் கூடிய குறித்த இந்தக் கருத் திட்டத்திற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப் பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான ஒரு 4 வருடக் கருத் திட்டத்தின் கீழ் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி இலங்கையிலுள்ள NDCs களுக்கு தேவையான MRV வேலைச் சட்டகத்தைத் தாபிக்க எதிர்பார்க்கப் படுகின்றது. இந்த MRV வேலைச் சட்டகத்தின் நிமித்தம் ஒரு முன்னோடிக் கருத் திட்டமாக பயன்படுத்தப்படக் கூடிய மூன்று வகைக் கருத் திட்டங்கள் இதன் கீழ் செயற்படுத்தப் பட்டுள்ளன. அத்தகைய கருத் திட்டங்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப் பட்டுள்ளன.

1. முதலில் 5 மாகாணங்களில் 1,000 உயிர் எரிவாயு அலகுகளைத் தாபித்தல்
2. தேயிலை உற்பத்தித் தொழிற்சாலைகளினது வினைத் திறனை அதிகரிக்கும் நிமித்தம் 1,300 மோட்டார்களை நிறுவுதல் மற்றும்
3. பற்றரிகளை களஞ்சியப்படுத்தும் வசதிகளுடன் 150 சூரிய சக்தி மின்னுற்பத்தி முறைமைகளை நிறுவுதல்

1.6 வெப்பநிலை, தீவு இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள விதம் ஆகியவற்றுக்கு இணங்க தீவில் அதிகளவு காற்று சக்தி மூல வளங்கள் காணப்படுகின்றன. அண்மையில், ஆ.அ.வ. நிதி உதவியில் வட மாகாணத்தில் மேற்கொள்ளப் பட்டிருந்த சூரிய சக்தி வளங்கள் மதிப்பீட்டுக் கருத் திட்டத்தின் மூலமாக மன்னார் பகுதியில் 375 மெ.வொ. காற்று சக்தி உற்பத்தி சாத்தியமுள்ளதாக தெரிய வந்துள்ளது. பூனகரிப் பகுதி 100 மெ.வொ. காற்று சக்தி உற்பத்தியை விடவும் அதிகளவான காற்று சக்தி உற்பத்தி சாத்தியம் காணப்படும் ஒரு பிரதேசமாக இனங்காணப்பட்டுள்ள மற்றொரு ஸ்தலமாகும்.

இ.நி.வ.அ.ச. மூலம் சூரிய சக்தி உற்பத்தி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலிருந்து மன்னார், அம்பாறை, மொனராகல், அம்பாந்தோட்டை, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் மொத்தமாக

1,100 மெ.வொ. சூரிய சக்தி மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய 11 ஸ்தலங்கள் காணப்படுவதாக இனங்காணப்பட்டுள்ளது. மேலும், தேசிய மீளப்புதுப்பிக்கத்தகு சக்திப் பரிசோதனை ஆய்வு கூடத்தினால் (NREL) 2003 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட சூரிய சக்தி வளங்கள் பற்றிய வரைபடத்தின் மூலம் சிறந்த நிலையிலிருந்து உன்னத நிலை வரையான சூரிய சக்தி வளங்கள் காணப்படும் 3 வலயங்கள் இனங்காணப்பட்டுள்ளன.

அரச மற்றும் தனியார் துறைகளின் அபிவிருத்தி நிமித்தம் நன்மைகளை பெற்றுக் கொடுக்கக் கூடிய நோக்கில் திட்டமிடப்பட்ட சூரிய சக்தி மற்றும் காற்று சக்தி அபிவிருத்திகளை மேலும் மேம்படுத்தும் குறிக்கோளுடன் 2009 ஆம் ஆண்டில் 'சக்தி உற்பத்திப் பேட்டைகளை' தாபிக்கும் எண்ணக்கரு முதல் தடவையாக இ.நி.வ.அ.ச. முன்மொழிந்தது. உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இறுதியாக பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிகளில் மின்னுற்பத்தி நிலையங்களை நிர்மாணிக்கும் நிமித்தம் போட்டிக் கேள்வி நடைமுறையினூடாக முதலீட்டுத் தரப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

- ✓ மொனராகல் பிரதேசத்தில் 100 மெ.வொ. சூரிய சக்தியை உற்பத்தி செய்யக் கூடிய சக்தி உற்பத்திப் பேட்டையின் நிமித்தம் சாத்தியமான மூன்று ஸ்தலங்கள் இனங்காணப்பட்டன. கொட்டியாகல் பிரதேசத்தில் ஒரு ஸ்தலமும் தேர்ந்தெடுக்கப்பட்டது. காணியை சுவீகரிப்பது பற்றிய ஆரம்ப பேச்சுவார்த்தைகளும் நடத்தப்பட்டன. கருத் திட்டத்திற்கான பதவியணியினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- ✓ பூனகரிப் பகுதியில் காற்று சக்தி உற்பத்திப் பேட்டையை தாபிக்கும் நிமித்தம் ஒரு ஸ்தலம் இனங்காணப்பட்டுள்ளது. வளங்கள் மதிப்பீட்டுப் பணிகள் நிறைவு செய்யப்பட்டன.

1.7 சக்தி முகாமைத்துவ செயற்பாடுகளை செயற்படுத்துவதனூடாக - 38 ஜி.வொ.ம. மின்சாரம், 11.04 மில்லியன் லீற்றர் டீசல், 14 மில்லியன் லீற்றர் உலை எண்ணெய் - 35 டொன் கழிவுப் பெற்றோலிய எரிவாயு (LPG), மற்றும் 27.2 கிலோ டொன் எரிவிறகுகள் எனும் சக்தி சேமிப்பு இலக்குகளை அடைந்து கொள்ள முடிந்துள்ளது.

1.8 ISO50001 என்ற சக்தி முகாமைத்துவ முறைமை அறிமுகப்படுத்தப்பட்டதன் ஊடாக வணிகம், கைத்தொழில், வீடு ஆகிய துறைகளில் சக்திப் பாதுகாப்பு நிமித்தம் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை வசதிகளை செய்து வழங்குகின்றது.

1.9 கைத்தொழில், வீடு மற்றும் வணிகம் ஆகிய துறைகளில் சக்தி வினைத் திறனை மேம்படுத்துதல் மற்றும் முகாமை செய்தல் ஆகிய அம்சங்களின் நிமித்தம் உகந்த தலையீடு சார் நடவடிக்கைத் திட்டங்களைத் தயாரித்தல் அடங்கலாக அறிவை ஏற்படுத்தும் முகமாக இ.நி.வ.அ.ச. மூலம் பல வகை செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1.10 நியமங்களையும் மற்றும் ஒழுங்குறுத்துகை சார்ந்த நடவடிக்கைகளையும் அறிமுகப்படுத்தல்:

1.10.1 CFL மின்குமிழ் தொடர்பில் காணப்படும் நியமங்கள் திருத்தத்திற்கு உட்படுத்தப்பட்டன. திருத்தப்பட்ட அத்தகைய நியமங்கள் இலங்கை நியமங்கள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டன.

1.10.2 சக்தி முத்திரையிடலை கட்டாயப்படுத்தல் பற்றிய ஒழுங்குறுத்தல் நடவடிக்கைகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டன.

1.10.3 குளிரூட்டிகளுக்காக வரையப்பட்ட சக்திப் பெயரிடுகை நியமங்கள் தயாரிக்கப்பட்டன. மேலதிக நடவடிக்கை நிமித்தம் இந்த நியமங்கள்

இலங்கை நியமங்கள் மற்றும் கட்டளைகள் நிறுவகத்திற்கு (SLSI) அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

1.10.4 குளிர்சாதனப் பெட்டிகளின் சக்தி நுகர்வு தொடர்பான தரவுகளை பரிட்சிக்கும் விடயங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது வரை பல வர்த்தகப் பெயர்களிலும் மற்றும் மாதிரிகளிலும் காணப் படும் குளிர்சாதனப் பெட்டிகள் தொடர்பான 15 எண்ணிக்கயைான பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளன.

1.10.5 LED மின்குமிழ்களுக்கு தன்னார்வ சக்தி முத்திரையிடும் முறையியல் அறிமுகப்படுத்தப்பட்டது.

1.10.6 கணனிகளுக்காக வரையப்பட்ட சக்திப் பெயரிடுகை தொடர்பான நியமங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

1.10.7 'இலங்கையின் கட்டிடங்கள் தொடர்பான பிரமாணக்குறிப்பு - 2008' ஆவணம்' திருத்தப்பட்டது. அது இந்த ஆண்டு இறுதியில் வெளியிடப் படவுள்ளது.

1.10.8 'வீடுகளுக்கான வழிகடாட்டல்' எனும் ஆவணத்தை இலங்கை நிலை பெறுதகு வலு அதிகார தயாரித்தது.

1.11 கைத்தொழில், வணிகம் ஆகிய துறைகள், அரச துறை சக்தி நிறுவனங்கள் என்பவற்றுடன் தொடர்புடைய பிரச்சினைகள் தொடர்பான ஆலோசனை சார்ந்த சேவைகளை வழங்குதல் மற்றும் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குதல், வேண்டுகோள்களின் பேரில் மேற்கொள்ளப்படும் விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் அதே நேரம் ISO 50001 கணக்காய்வு என்பவற்றில் பங்குபற்றுதல் முதலியவற்றினூடாக இ.நி.வ.அ.ச. உதவிகளை பெற்றுக் கொடுக்கின்றது.

1.12 இலங்கைத் தேசிய சக்தி வினைத் திறன் விருதுகள் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தை (SLNEEA) செயற்படுத்துவதனூடாக கைத்தொழில் துறை மற்றும் வணிகத் துறை ஆகிய துறைகளில் சக்தி முகாமைத்துவம் தொடர்பாக ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1.13 மாகாண மட்டத்திலான சக்தி முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தல் ஆகியவற்றின் நிமித்தம் இ.நி.வ.அ.ச. உதவிகளை பெற்றுக் கொடுக்கின்றது.

1.14 தேசிய சக்திப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம்:

1.14.1 பாலர் பாடசாலை ஆசிரிய ஆசிரியைகளை விழிப்பூட்டும் 4 நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

1.14.2 14,500 சாரணர்களுக்கென 6 சக்திப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

1.14.3 ஊடகவியலாளர்களுக்கென மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி மற்றும் சக்தி வினைத் திறன் தொடர்பான 9 வேலையரங்குகள் நடத்தப்பட்டன.

1.14.4 9000 அறநெறிப் பாடசாலைகளின் பங்குபற்றலுடன் இந்த அறநெறிப் பாடசாலைகளுக்கு இடையில் கட்டுரைப் போட்டிகள் நடத்தப்பட்டன. கிடைத்த 2000 கட்டுரைகளுக்கு இடையில் 100 கட்டுரைகள் இறுதிச் சுற்றுப் போட்டிக்காக தெரிவு செய்யப்பட்டன.

1.14.5 பாடசாலை சிறுவர்களை விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப் பட்டன.

1.14.6 அரச நிறுவனங்களுக்கென பொது விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

1.14.7 க.பொ.த. (சா.த.) மாணவர்களுக்கென சக்தி வினைத் திறனும் சமையல் அறையும் தொடர்பான நிகழ்ச்சித் திட்டம் நடத்தப்பட்டது.

1.14.8 NVQ சான்றிதழ் பெற்ற மோட்டார் மின்சுற்றுக்களை சுற்றும் நபர்கள் தொடர்பாக மோட்டார் மின்சுற்றுக்களை சுற்றுவது பற்றிய நிகழ்ச்சித் திட்டம் நடத்தப்பட்டது.

1.14.9 NVQ ஆசிரியர்கள் சக்தி வினைத் திறன் மோட்டார் மின்சுற்றுக்களை சுற்றிப் பாவனையில் ஈடுபடுத்துவது தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

1.15 'சுற்றாடலைப் பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல்' ஆகியன தொடர்பில் புத்த பெருமான் அவர்கள் வழங்கிய போதனைகளை உள்ளடக்கிய ஒரு நூல் வெளியிடப்பட்டது.

1.16 சக்தித் தரவுகள் பகுப்பாய்வு:

1.16.1 தேசிய சக்திச் சமநிலை 2015 மற்றும் பிரதான சக்தி மீளாய்வு 2015 ஆகிய ஆவணங்கள் வெளியிடப்பட்டன.

1.16.2 சக்திச் சமநிலை இணையத்தளம் இற்றைப்படுத்தப்பட்டது.

1.16.3 நிலைபெறுதகு சக்தியின் தன்மையைப் பகுப்பாய்வு செய்யும் ஒரு உபகரணமாக காபன் அடிச்சுவடுகள் பயன்படுத்தப்பட்டன.

1.16.4 உணவுப் பெறுமானச் சங்கிலிகள் தொடர்பான ஆய்வின் முதலாவது ஆண்டு நிறைவு செய்யப்பட்டது. குறித்த ஆய்வு பற்றிய இடைக்கால அறிக்கை வயம்ப பல்கலைக்கழக கால்நடைகள், கடற்றொழில்கள் மற்றும் போஷாக்கு பீடத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

1.16.5 2015 ஆம் ஆண்டு நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தொடர்பான ஆய்வின் தரவுகளை உள்ளடக்கும் செயற்பாட்டு விடயம் மேலதிகமாக மேற்கொள்ளப்பட்டது. சேகரித்த தரவுகளைப் பகுப்பாய்வு செய்யும் விடயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

1.17 நிலைபெறுதகு சக்தித் தொழில் நுட்பங்கள் பாதுகாப்பு:

1.17.1 பேராதெனியப் பல்கலைக்கழகப் பொறியியல் பீடத்தினது மின்சார மற்றும் இலத்திரனியல் பிரிவின் பங்குபற்றலில் பாரிய அளவில் சூரிய சக்தியை அபிவிருத்தி செய்யும் தொழில் நுட்ப தலையீட்டு நடவடிக்கை தொடர்பான இரண்டு உயர் ஆராய்ச்சிக் கருத் திட்டங்கள் முதலாவது ஆண்டினுள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டன.

- இலங்கையினுள் பாரிய அளவில் PV சூரிய சக்தியைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யும் மின்சார விநியோகத்தைப் பாதுகாத்தல்.
- DC நுண் நீர்வலுவினூடாக சக்தி வினைத் திறன் வாய்ந்த ரீதியில் PV சூரிய சக்தி மின்சாரத்தை நுகர்தல்.

1.17.2 2016 ஆம் ஆண்டிற்கான தூய சக்தி தொடர்பான ஆசிய பிராந்திய மாநாட்டில் மூன்று ஆராய்ச்சிப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

- மரபுரீதியற்ற மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்களை மையமாகக் கொண்டு உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரத்தை இலங்கை மின்சார வலையமைப்புக்கு இணைத்தல்.

- மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்களின் மூலமாக இலங்கையில் தனியான நாடளாவிய ஒரு மின்சார முறைமைக்கான உற்பத்தித் திறன் வாய்ந்த கேள்வி சார் முகாமைத்துவம்.

- இலங்கையின் மின்சக்தி வினைத் திறன் வாய்ந்த ஒளியமயமாக்கல் விடயத்தில் தலையீடு செய்தல்.

1.18 அறிவு சார்ந்த முகாமை நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் ஒரு கல்வி நிகழ்ச்சித் திட்டத்தைத் தயாரித்தல்:

1.18.1 6 ஆம் தரத்திலிருந்து 10 ஆம் தரம் வரை விஞ்ஞானப் பாட அலகுக்கு சக்தி பற்றிய அறிவும், செயற்பாடுகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அது ஏற்கெனவே புதிய பாடவிதானத்தின் கீழ் அரச பாடசாலைகளில் செயற்படுத்தப்பட்டுள்ளது. 11 ஆம் தரத்திற்கும், 7 ஆம் தரத்திற்கும் இது 2016 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்டது.

1.18.2 சகல மாகாணங்களிலுமுள்ள சக்திக் குழுக்களினது செயற்பாடுகளை நடைமுறைக்குக் கொண்டுவரும் நிமித்தம் நாட்டில் மாகாணங்கள் அனைத்தையும் ஒன்றிணைத்து 3 'நியிடுகின்ற நிகழ்ச்சித் திட்டங்கள்' செயற்படுத்தப்பட்டன.

1.18.3 அரச பாடசாலைகளிலிருந்து 3,000 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. கிடைத்த இந்த விண்ணப்பங்களுக்கு இடையில் 2,700 சக்திக் குழுக்கள் தாபிக்கப்பட்டுள்ளன. ஏற்கெனவே மேலும் சக்திக் குழுக்கள் தாபிக்கப் பட்டு வருகின்றன.

1.18.4 9 மாவட்டங்களின் 'எதிர்கால கனவு' கண்காட்சி நடத்தப்பட்டு சக்தி சார் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் மாகாண ரீதியில் விருதுகளும் வழங்கப்பட்டன.

1.18.5 சக்தி முகாமைத்துவத்திலும் மக்களின் நாளாந்த வாழ்க்கையிலும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்திப் பாவனையில் ஆசியர்களையும் மற்றும் மாணவர்களையும் ஈடுபடுத்துவதற்கு பாடசாலை சக்திக் குழுக்கள், சக்தித் தினக் கொண்டாட்டங்கள் அடங்கலாக பரந்த ஒரு நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்பட்டது.

1.19 தொடர்பாடல் நிகழ்ச்சித் திட்டங்கள்:

1.19.1 சீகிரியவில் நடத்தப்பட்ட 'இளைஞர் கண்காட்சி' - திறன்கள் விருத்தி பற்றிய வேலையரங்குகள், அறிவை விஸ்தரித்தல், பொழுதுபோக்கு என்பன அடங்கலான நவீனமயம் தொடர்பான விழிப்புணர்வு முதலிய நிகழ்ச்சித் திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

<u>02. கணக்காய்வு விசாரணைகள் மற்றும் கணக்காய்வு அறிக்கைகள் என்பவற்றில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.</u>

கணக்காய்வு தொடர்பான குறிப்பு இலக்கம்	2016 கணக்காய்வு அறிக்கையின் பிரகாரம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்கள்	சுட்டிக் காட்டப்பட்டுள்ள அந்த விடயங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்
2.2 2.2.1	(அ) நிலைபெறு தகு வலு அதிகார சபைக்கு ஒரு அலுவலகக் கட்டிடத்தை நிர்மாணித்தல். (i) இந்தக் காணி 2016 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் தனியான ஒரு குத்தகைக் காணியாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. 2016 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை இந்தக் காணியின் பெறுமானத்திற்கு தேய்மான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.	இந்தக் காணி 2017 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் ஒரு குத்தகைக் காணியாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் காணிக்கான தேய்மானம் கணிப்பிடப்பட்டுள்ளது.
	(ii) குறித்த காணியை குத்தகைக்குப் பெறும் பொருட்டு சக்தி நிதியத்தில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூ. 47,000,000.00 தொகை 2015 ஆம் ஆண்டில் மிகை வருமானமாக கணக்குகளில் பதியப்பட்டுள்ளதன் காரணமாக, அந்த ஆண்டில் 47,000,000 ரூபா தொகையால் மிகைத்து கணக்குக் காட்டப்பட்டிருந்தது.	இந்த விடயம் அடுத்த ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சீராக்கப்படும்.
	(iii) குறித்த இடம் தொடர்பில் செலவு செய்யப்பட்ட உண்மையான பெறுமதி சேர்த்தல் அடிப்படையிலான குத்தகைப் பெறுமானம் 2,698,675 ரூபாவாக இருந்தாலும், சக்தி நிதியத்திற்கு 5,020,368 ரூபா பற்று வைக்கப் பட்டதன் காரணமாக அந்த நிதியத்தின் நிதிக் கணக்கில் 2016 ஆம் ஆண்டு திசம்பர் 31 ஆம் திகதிற்கு 2,321,693 ரூபாவால் குறைத்து கணக்கிடப்பட்டிருந்தது.	குறித்த காணி தொடர்பில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் பெற்றுக் கொடுக்கப்பட்ட செலவுப் பட்டியலில் VAT பெறுமானமாக ரூ. 5,020,368.00 பதியப்பட்டுள்ளது. இது கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆகையால், நிலுவை குறைவாகக் காட்டப்படவில்லை என்பது எமது அபிப்பிராயமாகும்.
	(iv) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் குறித்த கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு செலாவகும் என மதிப்பிடப்பட்ட 3,936,978 ரூபா தொகை, சக்தி நிதிய முதலீட்டுக் கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தாலும் அது நிதியத்தின் கணக்குகளுக்கு வரவுவைக்கப்படாத காரணத்தினால் 2016 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம்	இந்த விடயம் சீராக்கப்பட்டுள்ளது.

	திகதிற்கு நிதியத்தின் நிலுவை அத்தகைய தொகையினால் மிகைத்துக் காட்டப்பட்டிருந்தது.	
	(v) சக்தி நிதியக் கணக்குகளிலிருந்து47 ,000,000 ரூபா பதிவழிக்கப்பட்டிருந்தாலும், குறித்த காணி தொடர்பில் செலவு செய்யப்பட்ட மொத்தச் செலவு 45,856,451 ரூபாவாக இருந்ததால், மேலதிகமாகப் பதிவழிக்கப்பட்ட 1,143,549 ரூபா நிதியத்தின் கணக்குகளுக்கு மீளச்செலுத்த வேண்டிய ஒரு நிலுவையாக கணக்குக் காட்டப்பட்டிருக்கவில்லை .	இதனை எதிர்வரும் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சீராக்குதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
	(ஆ) அம்பாந்தோடடை சூரிய சக்தி உற்பத்திப் பேட்டையின் நிமித்தம் சுவீகரிக்கப் பட்டிருந்த 50 ஏக்கர் அளவான காணி மீளாய்வு ஆண்டிலும் விலை மதிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.	விலை மதிப்பீட்டுப் பெறுமானம் சரியான முறையில் 2017 ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் உள்ளடக்கப்பட்டு மேலும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
	(இ) மீளாய்வு ஆண்டினுள் திறைசேரியிலிருந்து அரச மானியமாக கிடைத்திருந்த 60,000,000 ரூபா நிதியிலிருந்து நிகழ்ச்சித் திட்டங்களின் செலவுகளுக்கு என 42,144,744 ரூபா நிதி செயலாற்றுகை கூற்றில் வருமானமாக இனங்காணப்பட வேண்டியிருந்தும், 41,247,949 ரூபா தொகை மாத்திரம் வருமானமாக கணக்குக் காட்டப்பட்டிருந்தது.	செயலாற்றுகைக் கூற்றில் வருமானம் என இனங்காணப்பட்டுள்ள 41,247,949.00 ரூபா தொகை சரி என்பது எமது அபிப்பிராயமாகும்.
	(ஈ) ஒப்படைக்கப்படாத ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் நிதி உதவியின் கீழ் செயற்படுத்தப் பட்டிருந்த நிலைபெறுதகு சக்திப் பிரிவு கட்டம் 2 கருத் திட்டம் மற்றும் தூய சக்தி மற்றும் மின்சார வலையமைப்பு வினைத் திறன் மேம்பாட்டுக் கருத் திட்டம் ஆகியவற்றின் கீழ் விடுவிக்கப்பட்டிருந்த 62,560,065 ரூபா தொகையான கடன், கொடுப்பனவுகளின் பொறுப்புக்கள் அதிகார சபைக்கு ஒப்படைக்கப் பட்டிருக்கவில்லை. எனினும், அதிகார சபையினால் நடைமுறையல்லாத பொறுப்புக்களின் கீழ் நிதி நிலைக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.	எமது அதிகார சபைக்கு உரிய கட்டங்களில் கட்டுப்பாட்டு அதிகாரம் (Controlling Power) வழங்கப்பட்டுள்ளதால் அது நடைமுறையால்லாத சொத்தாகவும் அதே நேரம் நடைமுறையல்லாத பொறுப்பாகவும் இனங்காணப்பட்டுள்ளது.

2.3	(அ) 2016 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதிற்கு சக்தி நிதியத்தில் 293,257,237 ரூபா நிலுவை காணப்பட்டது. அந்தத் திகதிற்கு அதன் முதலீட்டு நிலுவை 306,628,315 ரூபாவாக இருந்ததால், 13,371,078 ரூபா வித்தியாசம் ஏற்பட்டிருந்தது. எனினும், ஒப்பிட்டு சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2017 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சக்தி நிதியத்தின் நிலுவை சரியான முறையில் கணிப்பிடப்பட்டு உரிய வித்தியாசத்திற்கான காரணங்கள் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளன.
	(ஆ) திறைசேரி உண்டியல்கள் மற்றும் நிலையான வைப்புக்களின் வட்டி வருமானங்கள் தொடர்பில் மீளாய்வு ஆண்டில் 1,231,353 ரூபா பிணையுத்தரவாத நிதியத்திற்கு வரவுவைக்க வேண்டியிருந்தும், 1,136,900 ரூபா வரவுவைக்கப்பட்டிருந்தமையினால் தெளிவுபடுத்த முடியாத 94,453 ரூபா வித்தியாசம் அவதானிக்கப்பட்டிருந்தது.	திறைசேரி உண்டியல்களினதும் மற்றும் நிலையான வைப்புக்களினதும் பெறுமானம் சரியான முறையில் கணிப்பிடப்பட்டு 2017 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
2.4	2010 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதிற்கு நிலைபெறுதகு வலு அதிகார சபையிலிருந்து இலங்கை மின்சார சபைக்கு செலுத்த வேண்டிய 897,025,999 ரூபா தொகையை செலுத்தித் தீர்ப்பதற்கு எந்த ஒரு வேலைத் திட்டமும் அதிகார சபையினால் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை.	இந்த 897,025,999 ரூபா தொகையை செலுத்தித் தீர்ப்பதற்கு தேவையான நிதி திறைசேரியிலிருந்து கோரப்பட்டாலும், அந்த நிதியைப் பெற்றுத்தர முடியாது என தேசிய வரவுசெலவுத்திட்டங்கள் திணைக்களம், மின்வலு சக்தி அமைச்சினூடாக எமக்கு அறிவித்துள்ளது.
2.5	(அ) ஒளியேற்றலுக்கான பிராந்திய நிலையம் (Regional Centre for Lighting) மின்சார சபையிலிருந்து அறவிடப்பட வேண்டிய 8,033,270 ரூபா தொகை 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27 ஆம் திகதி வரையிலும் அறவிடப் பட்டிருக்கவில்லை.	இந்த 8,033,270/= ரூபாவை இலங்கை மின்சார சபையினால் எமது அதிகார சபைக்கு மீளளிப்புச் செய்யுமாறு குறிப்பிட்டு 2017/09/09 ஆம் திகதி ஒரு கடிதம் இலங்கை மின்சார சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனினும், இலங்கை மின்சார சபை அந்த நிலுவைத் தொகையை இன்னும் மீளளிப்புச் செய்யவில்லை.
	(ஆ) மீளாய்வு ஆண்டு முடிவில், கிடைக்க வேண்டிய கணக்குகளில் உள்ளடக்கப்பட்ட ஒரு வருட காலத்திற்கு அதிகமான காலத்திற்கும் மற்றும் 4 வருடங்களுக்கு குறைந்த காலப் பகுதிற்கும் என கிடைக்க வேண்டிய 565,688 ரூபா நிலுவை மற்றும் வெளித் தரப்புகளுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட 3,480,844 ரூபா முற்பணங்களையும் மற்றும் மீளாய்வு ஆண்டினுள் அதிகார சபையின் 4 பிரதான செயற்பாட்டுக் கருத் திட்டங்கள் தொடர்பில் வழங்கப்பட்டிருந்த 16,397,978 ரூபா முற்பணங்களையும் 2016 ஆம்	இந்தக் கிடைக்க வேண்டிய நிலுவைகளில் அதிகமானவை பிற நிறுவனங்களிலிருந்து சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக செய்த மீளளிக்கக்கூடிய (Refundable) வைப்புகளாகும். ஆகையால், அத்தகைய சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் வரை அந்த மீளளிப்புத் தொகையை பெற முடியாது. எஞ்சிய நிலுவைகளில் அதிகமானவை சக்தி தொடர்பான கல்வி சார் கருத் திட்டங்களுக்காக மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருந்த முற்பணங்களாகும். அத்தகைய சேவைகளை அவை எமது அதிகார சபைக்கு வழங்கியிருந்தாலும், அத்தகைய சேவைகள் தொடர்பான செலவுகளைக்

	ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	குறிப்பிட்டு, அவற்றை ஒரு சில மாகாண சபைகள் தீர்ப்பனவு செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. அயினும், 2016/12/31 ஆம் திகதிற்கான நிலுவையிலிருந்து ரூ.20,789,010/= தொகை ஏற்கெனவே தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளது.
	(இ) மீளாய்வு ஆண்டு இறுதியில் அட்டுறு செலவாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்த 11,645,917 ரூபா தொகைக்கு இடையில் 7,269,482 ரூபா 05 வருடங்களுக்கு அதிக காலமாகவும் மற்றும் 352,704 ரூபா 04 வருட காலமாகவும் முன்கொணரப்பட்டிருந்தன. எனினும், இந்தத் தொகையை தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது அது தொடர்பில் வேறு ஏதாவது பொருத்தமான நடவடிக்கையை எடுப்பதற்கு அதிகார சபை மீளாய்வு ஆண்டு முடிவடையும் வரையிலும் நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை.	2016/12/31 ஆம் திகதியிலிருந்த அட்டுறு செலவு ரூ.11.6 மில்லியன் தற்பொழுது ரூ.5.9 மில்லியன் வரை குறைவடைந்துள்ளது. இதில் ரூ. 1.36 மில்லியன் செலுத்தப்பட்டிருப்பது 2012 முதல் 2015 ஆம் ஆண்டு வரை கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய அட்டுறு செலவாகும்.
2.6	'சுவிச்-ஏசியா' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து கிடைத்திருந்த 7,334,354 ரூபா தொகையில், 3,135,202 ரூபா 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளிலும் அதிகார சபையின் சகல ஊழியர்களுக்கும் என தொழில் சார்ந்த கொடுப்பனவுகளாக செலுத்தப்பட்டிருந்தது. சட்டமுறையற்றதாக செலுத்தப்பட்டிருந்த இந்தக் கொடுப்பனவை உரிய அலுவலர்களிடமிருந்து அல்லது பொறுப்புகூற வேண்டிய அதிகாரிகளிடமிருந்து அறவிடுமாறு அமைச்சின் செயலாளரினால் 2012 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 03 ஆம் திகதி பணிப்புரை விடுக்கப்பட்டது. எனினும், 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதி வரையிலும் அந்தப் பணிப்புரை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.	இந்த சுவிச் ஏசியா நிகழ்ச்சித் திட்டத்தின் நிதிகளிலிருந்து ஊழியர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த நிதியை மீளறவிடுமாறு அமைச்சிலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட ஒரு கடிதம் எமது அதிகார சபையின் நிதிப் பிரிவுக்குக் கிடைக்கவில்லை. எவ்வாறாயினும், இந்தக் கொடுப்பனவை நியாயப்படுத்தி, திறைசேரியின் மூலம் அனுமதித்துக் கொள்ளும் நிமித்தம் நாம் 2016/11/29 ஆம் திகதி ஒரு கடிதத்தை DMS திணைக்களத்திற்கு அனுப்பி வைத்துள்ளோம். 2017/03/08 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் ஏற்கெனவே எமது மேற்குறித்த கோரல் அமைச்சின் செயலாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 2016/06/21 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம், பொதுத் திறைசேரி, தேசிய சம்பளங்கள் பதவியணி ஆணைக்குழுவிடமிருந்து (National salaries & carders) அபிப்பிராயத்தை வினவியுள்ளதாக எமக்கு அறிவித்துள்ளது.
2.7	(அ) சக்தி நிதியத்தின் குறிக்கோளுக்கு முரணாக நிலைபெறுதகு வலு அதிகார சபைக்கு ஒரு அலுவலகக் கட்டிடத்தை நிர்மாணிக்கும் பொருட்டு ஒரு காணியைக்	மீண்டும் செலுத்தும் அடிப்படையில் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை நிதியிலிருந்து 50,936,978.00 ரூபா செலுத்தப்பட்டு, குறித்த இந்தக் காணித் துண்டு மேற்குறித்த

	கொள்வனவு செய்வதற்கும் மற்றும் அந்தக் கட்டிடத்தின் வடிவமைப்புத் திட்டத்தைத் தயாரிப்பதற்கும் என 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட மொத்தச் செலவு 50,936,978 ரூபா தொகையை அந்த நிதியத்தின் முதலீடுகளிலிருந்து கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	செயற்பாடு நிமித்தம் பெற்றுக் கொள்ளப்பட்டது.
	(ஆ) நியமிக்கும் அதிகாரியினால் உரிய முறையில் நியமனம் செய்யப்படாமலும், அமைச்சின் செயலாளரது அனுமதியின்றியும் 2013 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை பதில்கடமைகளுக்கான கொடுப்பனவாக மொத்தம் 2,180,886 ரூபா தொகை செலுத்தப்பட்டிருந்தது.	ஆட்சேர்த்துக் கொள்ளும் நடைமுறைத் திட்டத்தை அனுமதித்துக் கொள்ளும் நிமித்தம் அந்தத் திட்டத்தைத் தயாரிக்கும் பணியை மேற்கொள்வதற்கு நிரல் அமைச்சு, சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பில் ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்தப் பணி நிறைவு செய்யப்பட்டவுடன் இந்த நியமனத்தை முறைப்படுத்த முடியும்.
	(இ) மீளாய்வு ஆண்டின் திசம்பர் மாதம் 31 ஆம் திகதிற்கு அதிகார சபையின் சொத்துக்கள் தொடர்பில் பொருட்கள் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	ஏற்கெனவே நிலையான சொத்துக்கள் மீள் விலை மதிக்கப்பட்டு வருகின்றன. தயனிொன ஒரு குழு நியமிக்கப்பட்டு பொருட்கள் கணிப்பீடும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
	(ஈ) மொத்தம் 1,869,975,742 ரூபா தொகையான சொத்துக்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பட்டிய் உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் பேணப்பட்டிருக்கவில்லை.	நிலையான சொத்துக்கள் தொடர்பான ஒரு பட்டியல் ஆரம்பத்தில் இருந்து பேணிச் செல்லப்பட்டுள்ளது. இந்தப் பட்டியல் 2012 ஆம் ஆண்டில் இற்றைப்படுத்தப்பட்டது. இது 2015 ஆம் ஆண்டில் மீண்டும் இற்றைப்படுத்தப்பட்டது.
	(உ) 14,885,933 ரூபா பெறுமதியான கணனிகள், துணைப்பாகங்கள் மற்றும் மென்பாகங்கள் என்பன தொடர்பான நிலையான சொத்துக்கள் பட்டியல் பேணப்பட்டிருக்கவில்லை.	கணனிகள், துணைப் பாகங்கள் மற்றும் மென்பாகங்கள் என்பன அடங்கிய நிலையான சொத்துக்களின் ஒரு பட்டியலைத் தயாரிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். தயாரிக்கும் அந்தப் பணி ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
	(ஊ) மீளாய்வு ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களுடன் 2016 ஆம் ஆண்டிற்கான நகல் அறிக்கை வருடாந்தம் கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	ஏற்கெனவே 2016 ஆம் ஆண்டின் ஒரு நகல் அறிக்கை கணக்காய்வாளர் அதிபதிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
	(எ) பணிப்பாளர்கள் சபையின் அனுமதியின்றியும் மற்றும் குறித்த சுற்றறிக்கைக்கு முரணாகவும் மேற்குறித்த பதவிகளில் பதில் கடமைகளை நிறைவேற்றுகின்ற 06 உத்தியோகத்தர்களுக்கு 2013 ஆம்	பதில் கடமைகள் நிறைவேற்றப்படுகின்ற பதவிகள் பற்றிய மேற்குறித்த விடயங்களுக்கு மேலதிகமாக இந்த உத்தியோகத்தர்களுக்கு என வழங்கப்பட்டுள்ள ஏனைய வசதிகளும் கூட அந்தப் பதவிகளுக்குரிய வசதிகளாகும். அந்தப் பதவிகளுக்குரிய பொறுப்புக்கள் நிறைவேற்றப்

	ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை எரிபொருள் கொடுப்பனவாக 2,600,000 ரூபாவும் மற்றும் 2015, 2016 ஆம் ஆண்டுகளினுள் 03 பிரிவுத் தலைவர் பதவிகள் தொடர்பில் போக்குவரத்துக்கான கொடுப்பனவாக 1,650,000 ரூபாவும் செலுத்தப்பட்டிருந்தன.	படுகின்ற போது அவற்றுக்கு அவசியமான வசதிகளை செய்து வழங்க அதிகார சபை கடமைப்பட்டுள்ளது. ஆகையால், இந்த மேலதிக செலவு அந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படுவது எந்த விதத்திலும் நியாயமில்லை என்பதுடன் அவ்வாறு அறவிடுவதற்கு நிருவாக ரீதியில் அவகசாமுமில்லை.
4 4.1	<u>இயக்கச் செயற்பாடு சார்ந்த மீளாய்வு</u> (அ) இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைக்கு சக்தி வினைத் திறன் சார்ந்த சேவைகளை வழங்குவது தொடர்பில் நேரடியான பொறுப்பு இருப்பதால், அதிகார சபையில் பொறியியலாளர்கள் மற்றும் தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் ஆகியோர் அடங்கலாக நிபுணத்துவம் வாய்ந்த ஒரு பதவியணியும் மற்றும் கட்டிட நிர்மாண அளவீட்டு உபகரணங்களும் இருக்க வேண்டும் என்றிருந்தும், இந்த சக்தி சார்ந்த சேவை வழங்கும் பிரிவில் பணியாற்றுகின்ற பதவியணியினர் மீளாய்வு ஆண்டில் ஒரு தொழில் நுட்ப உத்தியோகத்தர் வரை குறைந்திருந்தமை மற்றும் 2008, 2010 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த அளவீட்டு உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டமை ஆகியவற்றின் காரணமாக சேவை வழங்கல் வீழ்ச்சியை அடைந்திருந்தது.	இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை ஆரம்பிக்கப்பட்டிருந்த நேரத்தில் சக்திக் கணக்காய்வு விடயங்கள் மேற்கொள்ளப்பட்டாலும். பின்னர் அத்தகைய சக்திக் கணக்காய்வு விடயங்களுடன் நேரடியாக சம்பந்தப்படாமல், இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள சக்தி சார்ந்த சேவைகளை விநியோகிக்கின்ற நிறுவனங்களினூடாக அத்தகைய சக்திக் கணக்காய்வு விடயங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சக்திக் கணக்காய்வின் நிமித்தம் நிதியை செலவு செய்ய இயலாத அரச நிறுவனங்களுக்கு மாத்திரம் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சயையின் மூலம் சக்திக் கணக்காய்வுச் செயற்பாடுகள் நிறைவேற்றப்படுகின்றன.
	(ஆ) நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான மீதோட்டமுல்லவிலுள்ள 3.5 ஏக்கர் அளவான காணியில் திண்மக் கழிவுகளின் மூலம் 10 மெ.வொ. மின்சாரத்தை உற்பத்தி செய்யும் ஒரு கருத் திட்டத்தை அமைக்கும் நிமித்தம் Western Power லிமிற்றட் எனும் கம்பனிக்கு 2014 ஆம் ஆண்டு மே மாதம் 23 அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டிருந்தாலும், அந்த அனுமதிப் பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் 02 வருட கால முடிவில் அதாவது 2016 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதியளவிலும் குறித்த அந்தக் கருத் திட்டம் ஆரம்பிக்கப் பட்டிருக்கவில்லை. திண்மக் கழிவுகளை அகற்றும் பிரச்சினைக்கு ஒரு தீர்வாக இத்தகைய கருத் திட்டங்களை விரைவில்	திண்மக் கழிவுகளிலிருந்து மின் சக்தியை உற்பத்தி செய்யும் நிமித்தம் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை அனுமதிப் பத்திரங்களை விநியோகித்துள்ளது. அனுமதிப் பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டதன் பின்னர், உரிய தரப்புகளிடம் முன்னேற்றம் பற்றி வினவப்பட்டது. எனினும், போதிய முன்னேற்றம் குறித்த அந்த தரப்புகளினால் எமக்கு அறிக்கையிடப்பட முடியாமல் போயிருந்தமைக்கு காரணம் இந்தத் திண்மக் கழிவுகளின் முகாமை தொடர்பில் எமது அதிகார சபையின் அல்லது கருத் திட்டத்தை முன்வைக்கும் தரப்பின் கட்டுப்பாட்டிற்கு அப்பால்பட்ட சக்தியாகும். பிரதானமாக அந்த கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி இயக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மின்னுற்பத்திப் பொறித் தொகுதிகளை

	செயற்படுத்த வேண்டியிருந்தும் கூட, குறித்த அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டதன் பின்னர், அதிகார சபையினால் போதியவாறு கண்காணிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.	நிர்மாணிப்பதற்கான காணியை எந்த ஒரு நிறுவனத்தினாலும் பெற்றுக் கொள்ள முடியாமைக்கு காரணம் குறித்த பிரதேசத்தில் வசிக்கின்ற மக்களின் கடுமையான எதிர்ப்பாகும். மேலும், இந்தக் கருத் திட்டங்களுக்கு தொழில் நுட்பங்களை அல்லது முதலீட்டு வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியாது போனமைக்கும் இதுவே காரணமாகும். இந்தத் துறையில் ஏற்பட்டுள்ள சிக்கல் வாய்ந்த பிரச்சனைக்கு தீர்வுகாணப்படும் வரை வெற்றிகரமான ஒரு முன்னேற்ற நிலையை எதிர்பார்க்க முடியாது.
	(இ) அனுமதிப் பத்திரம் பெற்ற நிறுவனங்களினால் இறக்குமதி செய்யப்பட்டு நிறுவப்பட்ட சூரிய சக்தி மின் உற்பத்தி உபகரணங்களின் தரம், சேவை விநியோகம் என்பன பற்றி போதிய பரிசீலனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	அத்தகைய பொருட்களின் தரம் நாம் எதிர்பார்க்கும் தரத்தில் காணப்படுவதால், மேலதிக நிபந்ததனைகள் ஏதும் விதிக்கப்படவில்லை.
	(ஈ) 2012 ஆம் ஆண்டளவில் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருந்த 9 சூரிய சக்திக் கோபுரங்களில், ஒரு சில கோபுரங்கள் தொடர்ர்ச்சியாக தரவுகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய நிலையில் இருக்கவில்லை. மேலும், இந்தத் தரவுகளைப் பயன்படுத்தி காற்று சக்தி வளங்கள் வரைபடமும் மற்றும் திட்டங்களும் தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.	இயங்காதிருந்த அந்தக் காற்று சக்திக் கோபுரங்களை மீண்டும் இயங்கும் நிலைக்குக் கொண்டுவரும் நிமித்தம் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பலாங்கொட, கலமெட்டிய, முல்லிபுரம், சீதாஎளிய மற்றும் சிலாவத்துறை முதலிய பிரதேசங்களில் அமைந்துள்ள காற்று சக்திக் கோபுரங்களிலிருந்து தரவுகள் சேகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சூரிய சக்தி வளங்கள் வரைபடத்தைத் தயாரிக்கும் பணியும் 2017 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் அளவில் நிறைவு செய்யப்படவுள்ளது.
	(உ) 2011 ஆம் ஆண்டு வேலைகளுக்கான பூர்வாங்க முற்பணமாக 416,875 ரூபாவை செலுத்தி உபகரணங்களின் ஆகுசெலவு மற்றும் செயலாக்கல் கட்டணம் என மொத்தம் 1,410,250 ரூபா தொகையை செலவு செய்து ஒரு காற்று சக்திக் கோபுரத்தின் நிர்மாணப் பணிகள் இடையில் நிறுத்தப்பட்டிருந்தன. 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதி வரையிலும் அந்த நிர்மாணப் பணிகளை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 6 வருடங்களுக்கு முன்னர் கொள்வனவு	இந்த நிர்மாணப் பணிகள் 2017 ஆம் ஆண்டு மே மாதமளவிலும் நிறைவு செய்யப்படாதிருந்த காரணத்தால், எழுத்தில் அறிவிக்கப்பட்டதன் பின்னர் உரிய ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டது. பின்னர் எடுத்த தீர்மானத்திற்கு இணங்க இந்த காற்று சக்திக் கோபுரத்தை வேறொரு இடத்தில் நிர்மானிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் போது, ஹபரகல காற்று சக்திக் கோபுரத்திற்காக தயார்படுத்தப்பட்ட கோபுரத்தின் உபகரணங்களும் உதிரிப்பாகங்களும் எடுத்துவரப்பட்டு அவை பயன்படுத்தப்படவுள்ளன. தற்பொழுது இந்தக் கோபுரத்தின் உபகரணங்கள் இலங்கை

	செய்யப்பட்ட உபகரணங்களை மேலும் பாவனையில் ஈடுபடுத்துதல் மற்றும் செயலாக்கல் கட்டணங்களை மீளறவிடுதல் என்பன கணக்காய்வின் போது பிரச்சினைக்குரிய விடயங்களாக அவதானிக்கப்பட்டன.	நிலைபெறுதகு வலு அதிகார சபையின் பாதுகாப்பிலுள்ளன.
4.2	முகாமைத்து செயற்பாடுகள்	
	(அ) அதிகார சபைக்கு ஒரு தலைமை அலுவலகக் கட்டிடத்தை நிர்மாணிக்கும் நிமித்தம் குத்தகை அடிப்படையில் ஒரு காணி பெறப்பட்டிருந்தது. சட்ட ஆலோசனைகள் பெறப்படாமல் குத்தகை ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டிருந்த காரணத்தினால் 02 வருடங்களுக்குள் அபிவிருத்திப் பணிகளை நிறைவு செய்வதற்கு தவறும் பட்சத்தில், குத்தகை ஆதனத்தின் உரித்து குத்தகைக்காரருக்கு செல்லும் எனும் ஒரு நிபந்தனை குத்தகை ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. எனினும், 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதிற்கு 2 ஆண்டுகள் கழிந்தும், குறித்த கட்டிடத்தின் வடிவமைப்பு நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.	மூன்று மாதத்திற்குள் அபிவிருத்தி பணிகளை ஆரம்பிப்பதற்கும், இரண்டு வருடத்திற்குள் அத்தகைய அபிவிருத்தி பணிகளை நிறைவு செய்வதற்கும் இயலாது போகும் சந்தர்ப்பத்தில், குத்தகை ஒப்பந்தம் முடிவுறுத்தப்படும் என குத்தகை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்பொழுது அந்த காணியில் மண்ணின் தன்மை பற்றிய ஒரு ஆய்வு நடத்தப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. கட்டிட நிர்மாணப் பணிகள் இறுதிக் கட்டத்திலுள்ளன. குத்தகைத் தரப்பாகிய நகர அபிவிருத்தி அதிகார சபை கட்டிட அனுமதிப் பத்திரம் பற்றி கருத்திற் கொண்டு முடிவு செய்ய இல்லை என்பதால், இந்த நிபந்தனைகளை தளர்த்துமாறு அந்த அதிகார சபைக்கு எமது அதிகார சபை ஒரு வேண்டுகோளை விடுத்துள்ளது.
	(ஆ) 2016 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 25 ஆம் திகதி ஓய்வுபெற்றுச் சென்ற சிரேஷ்ட முகாமையாளர் ஒருவருக்கு ஓய்வூதியப் பணிக்கொடைகள் செலத்தப்பட்ட நேரத்தில் சீராக்கல் கட்டணமும் சேர்த்து கணிப்பிடப்பட்டிருந்ததால் 94,990 ரூபா தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.	சீராக்கல் கொடுப்பனவையும் உள்ளடக்கி ஓய்வூதியப் பணிக்கொடைக் கொடுப்பனவுகள் தொடர்பில் சரியாக கணக்கிடும் சூத்திரத்தை ஆராய்ந்து பார்க்குமாறு மேலதிக கணக்காய்வாளர் அதிபதியுடன் நடந்த கலந்துரையாடலின் போது அறிவுரைகள் வழங்கப்பட்டன. அதன் நிமித்தம் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.
	(இ) நிலைபெறுதகு வலு அதிகார சபையின் ஆரம்பத்திலிருந்து ஊழியர்களின் சம்பளங்கள் பரிவர்த்தனை செய்யப்பட்டது போது ஏற்பட்ட தவறுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கைக்கு இணங்க 2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆம் திகதி முதல் 2011 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை குறித்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக மேலதிகமாக செலுத்தப்பட்ட 2,171,760 ரூபா சம்பளங்களையும் மற்றும்	இந்தக் குறிப்பில் மோசடி என சுட்டிக் காட்டப்பட்டுள்ள அறிக்கை ஒரு ஓய்வுபெற்ற அதிகாரியினால், எமது பணிப்பாளர்கள் சபை அழைப்பு விடுத்ததன் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட ஒரு அறிக்கையாகும். அந்த அறிக்கை பல தவறுகளை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டமை அப்போது அவதானிக்கப்பட்டதன் பின்னர் அந்த அறிக்கையை ஒரு வழிகாட்டியாக கருதி தீர்மானமெடுப்பது சரியில்லை என்பது கருத்திற் கொள்ளப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டது. இது பற்றிய முழுமையான ஒரு அறிக்கை

	கொடுப்பனவுகளையும் உரிய அலுவலர்களிடமிருந்து அறவிடுவதற்கு பிரதான வகைகூறும் அதிகாரியாகிய அமைச்சின் செயலாளரினால் பணிப்புரை விடுக்கப்பட்டிருந்தும், அது தொடர்பாக அதிகார சபையினால் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பணிப்பாளர்கள் சபைக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.
	(ஈ) 2007 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28 ஆம் திகதி செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம், 18 மாதங்களுக்குள் மின் சக்தியில் இயங்கும் மூன்று ப்ரொட்டோடைப் வாகனங்களைத் தயாரிப்பதற்காக 2007 ஆம் ஆண்டில் ஒரு வெளித்தரப்புக்கு 7,956,800 ரூபா தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும், 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதி வரையிலும் அவற்றில் ஒரு வாகனத்தையும் தயாரிக்க இயலாமலிருந்தது. 8 ஆண்டுகள் கழிந்தும் குறித்த அந்த 03 வாகனங்களை தயாரித்துப் பெற்றுக் கொள்வதற்கு அல்லது செலுத்தப்பட்ட குறித்த நிதித் தொகையை மீளறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	இது தொடர்பாக சட்டமா அதிபரிடம் அறிவுரைகள் பெற்றுக் கொள்ளப்பட்டன. அவர் எமக்கு அறிவித்தது யாதெனில் செலவு செய்யப்பட்டிருக்கின்ற நிதியுடன் ஒப்பிடும் போது நடுத்தீர்ப்புக்கு அல்லது சட்டநடவடிக்கைக்கு சென்றால், மிகவும் அதிக அளவில் செலவாகும் என்று. அகையால், இந்தக் கருத் திட்டத்தை உரிய முறையில் வெற்றிகரமாக நிறைவு செய்வதிலுள்ள சாத்தியம் பற்றி ஆராய்ந்து பார்க்குமாறு அமைச்சின் செயலாளரினால் உரிய ஒப்பந்தத் தரப்பின் ஊடாக இந்த அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் நிமித்தம் காணப்படும் மாற்றுவழித் திட்டங்களை அறிமுகப்படுத்தும் விரிவான ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையை 2 வாரங்களுக்குள் அமைச்சுக்கு ஒப்படைக்க முடியும்.
4.3	<u>இயங்காத குறை பயன்பாடுடைய சொத்துக்கள்</u> (அ)'சுவிச்' ஏசியா நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிடைத்து எஞ்சியிருந்த 4,548,176 ரூபா 2011 ஆம் ஆண்டிலிருந்து மக்கள் வங்கியின நடைமுறைக் கணக்கிலும் மற்றும் சக்தி நிதியத்திற்குரிய 150,000,000 ரூபாவுக்கு அதிகமான தொகை தேசிய சேமிப்பு வங்கிக் கணக்கிலும் பல ஆண்டுகளாக ஆம் 2011 2011 ஆண்டிலிருந்து மக்கள் வங்கியின் கணக்கிலும், சக்தி நிதியம் தொடாபாக 150,000,000 ரூபாவுக்கு அதிகமான தொகை தேசிய சேமிப்பு வங்கிக் கணக்கிலும் பல ஆண்டுகளாக எந்த ஒரு முதலீட்டு நடவடிக்கைக்கும் பயன்படுத்தப்படாமல் வைப்பிலிடப்பட்டிருந்தன.	இது தொடர்பாக விபரங்கள் அடங்கிய ஒரு கடிதம் 2014.12.02 ஆம் திகதி சுற்றாடல் மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சின் செயலாளரினூடாக பொதுத் தொழில்முயற்சிகள் பற்றிய குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டு, அதன் பிரதிகள் திறைசேரிக்கும் மற்றும் கணக்காய்வாளர் அதிபதிக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மேலும், இது தொடர்பான காரணங்களை முன்வைத்து அனுமதியைக் கோரி திறைசேரிக்கு ஒரு கடிதம் மின்வலு மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சின் செயலாளரினால் 2016.12.06 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

	(ஆ) அதிகார சபைக்கு சொந்தமான ஒரு கெப் வண்டி சுமார் 2½ வருட காலமாக இயங்காதிருந்தது. இந்த வாகனத்தை பழுதுபார்ப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதி வரையிலும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த கெப் வண்டி தொடர்பாக 2015.06.17 ஆம் திகதி Automobile Association of Ceylon நிறுவனத்திலிருந்து ஒரு மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அந்த கெப் வண்டியை பழுதுபார்ப்பது பொருளாதார ரீதியில் நன்மை அளிக்காது என்பதால் அதனை அகற்றுமாறு அந்த நிறுவனம் அந்த அறிக்கையில் சிபாரிசு செய்து எமக்கு அறிவித்துள்ளது.
4.4	<u>பதவியணி நிருவாகம்</u> (அ) 2003 ஆம் ஆண்டு யூன் மாதம் 02 ஆம் திகதிய 12 ஆம் இலக்கப் பொதுத் தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3 ஆம் பந்தியின் பிரகாரம் அதிகார சபைக்கான அனுமதிக்கப்பட்ட ஒரு ஆட்சேர்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு, அந்தத் திட்டம் அனுமதிக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.	திருத்திய ஒரு நிறுவனக் கட்டமைப்பு தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினது அனுமதியின் நிமித்தம் மின்வலு மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
	(ஆ) 2016 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதிற்கு பதவியணியில் 33 பதவி வெற்றிடங்கள் நிலவின. இந்தப் பதவி வெற்றிடங்களுக்கு இடையில் 3 பணிப்பாளர் பதவி வெற்றிடங்களும், 4 பகுதித் தலைவர் பதவி வெற்றிடங்களும் மற்றும் 12 முகாமைத்துவப் பதவி வெற்றிடங்களும் காணப்பட்டன.	ஆட்சேர்ப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு ஏற்கெனவே அனுமதியின் நிமித்தம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த ஆட்சேர்ப்புத் திட்டம் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சகல ஆட்சேர்ப்புகளையும் மேற்கொள்ள முடியும்.
	(இ) மேற்குறித்த மூன்று பணிப்பாளர் பதவி வெற்றிடங்களிலும் மற்றும் 4 பகுதித் தலைவர் பதவி வெற்றிடங்களிலும் 3 பதவி வெற்றிடங்களுக்கு பணிப்பாளர்கள் சபையின் அனுமதியின்றி அதிகார சபையின் தலைவரினால் பதில் கடமைப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புகள் செய்யப்பட்டிருந்தன.	கணக்காய்வு விசாரணையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளவாறு நியமிக்கும் அதிகாரி பணிப்பாளர்கள் சபை என திருத்தப்படுதல் வேண்டும். பணிப்பாளர் நாயகத்தினது சிபாரிசின் பேரில், பணிப்பாளர்கள் சபையின் தலைவர் என்ற ரீதியில் சபையின் தலைவர் குறித்த நியமனங்களைச் செய்துள்ளார். சிரேஷ்ட நிபுணரின் (மனித வளங்கள்) மூலம், பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் (செயற்பாடுகள்) மூலம், பணிப்பாளர்கள் நாயகத்தின் மூலம், என சிபாரிசுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.
4.5	<u>ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு பெற்றுக் கொடுத்த வளங்கள்</u> பகுதித் தலைவர் (தொழில் நுட்ப அபிவிருத்தி) மற்றும் பதில் கடமைப் பணிப்பாளர் (மூலோபாயம்) ஆகிய பதவிகளை வகிக்கின்ற அலுவலர் 2016 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 15 ஆம் திகதி மின்வலு	இந்த அலுவலர் அமைச்சின் பணிப்பாளர் பதவிற்கு (தொழில் நுட்பம்) இணைக்கப் பட்டிருந்தாலும் கூட, இந்த அதிகார சபையின் பொறுப்புப் பணிகளும் மற்றும் கடமைகளும் அந்தக் காலப் பகுதியில் அவரினால் குறையின்றி

	மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சின் பணிப்பாளர் (தொழில் நுட்பம்) பதவிற்கு அமைச்சரவையின் அங்கீகாரமின்றி ஒரு வருட காலம் முழுநேர அலுவலராக விடுவிக்கப்பட்டு, கணக்காய்வு செய்யப்பட்ட திகதியான 2017 ஆம் ஆண்டு மே மாதம் வரையிலும் அந்த அலுவலருக்கு அதிகார சபையினால் 1,404,828 ரூபா சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.	நிறைவேற்றப்பட்டமையையும் மற்றும் அதிகார சபையின் தேவைகளை அமைச்சு மட்டத்தில் மிகவும் விரைவில் நிறைவேற்றிக் கொள்வதற்கு அவர் பங்களித்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். இந்த அனுவதித்தல் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட குறித்த நியமனம் இந்த அதிகார சபையின் விவகாரங்களுக்கு பெரிதும் துணையாக அமைந்துள்ளது என்பது அதிகார சபையின் கருத்தாகும்.
5 **5.1**	2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 02 ஆம் திகதிய PED/45 ஆம் இலக்கப் பொதுத் தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்குகளை சமர்ப்பிக்கும் முகாமைத்துவத்தின் பொறுப்புகள் தொடர்பான கூற்று நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு முகாமைத்துவத்திற்கு இருக்கின்ற பொறுப்புக்களை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
5.2	ஆம் திகதிய 02 ஆம் ஆண்டு யூன் மாதம் 2003 PED/ஆம் இலக்கப் பொதுத் 12 5.1.2 தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் ஒரு ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டிணைந்த .திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை	சக்திக் கொள்கை தொடர்பான நகல் அறிக்கை ஏற்கெனவே உரிய மீளாய்வுக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி கூட்டிணைந்த திட்டத்தைத் தயாரிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
5.3	வருடாந்த செயல் திட்டத்தின் பிரகாரம், கருத் திட்டங்களையும் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களையும் செயற்படுத்தும் பொருட்டு மீளாய்வு ஆண்டில் ஒதுக்கப்பட்டிருந்த நிதியில் அண்ணளவாக 40 வீதம் பயன்படுத்தப்பட்டிருந்தது. இது, குறித்த செயல் திட்டத்தின் பிரகாரம் அதிகார சபை தனது குறிக்கோள்களை நிறைவேற்றத் தவறியுள்ளது என்பதை சுட்டிக்காட்டியிருந்தது.	2015 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை அவ்வப்பொழுது அமைச்சரவையில் மாற்றம் நிகழ்ந்ததையடுத்து, அரசாங்கத்தின் புதிய கொள்கைகளுக்கு ஏற்ப எதிர்கால நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரிக்கும் பணி 2016 ஆம் ஆண்டு முதல் பகுதியில் மேற்கொள்ளப்பட்டது. அது வரை காலமும், தயாரிக்கப்பட்டிருந்த 2016 ஆம் ஆண்டிற்கான வேலைத் திட்டத்திற்கு இணங்க முழுமையாக செயல்படுவதற்கான வாய்ப்புகள் கிடைக்கவில்லை.
5.4	மீளாய்வு ஆண்டு காலப் பகுதியில் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் இல்லாதிருந்த காரணத்தினால் கணக்காய்வுத் திட்டத்திற்கு இணங்க கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை ஆட்சேர்த்துக் கொள்ளும் பொருட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைக்கவில்லை.
5.5	(அ) வரவுசெலவுத்திட்டத்தின் மூலம் மூலதனமாக ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகளில் 3,450,959 ரூபா அதாவது நூற்றுக்கு 58 வீதம் உரிய கரும விடயங்களின் நிமித்தம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	இதில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவன முகாமைத்துவ விடயம் தொடர்பாக ஒதுக்கப்பட்ட 6 மில்லியன் ரூபா முதலீட்டில் எஞ்சியுள்ள 3.4 மில்லியன் ரூபா அலுவலகக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு அவசியம் என்றிருந்த காணியைப் பெற்றுக்

	வரவுசெலவுத்திட்டத்தின் மூலம் நிதியேற்பாடுகள் ஒதுக்கப்படாத நிலையிலும், அந்த எஞ்சிய நிதியேற்பாடுகளும் பயன்படுத்தப்பட்டு கட்டிடங்களையும் மற்றும் காணிகளையும் மேலும் அபிவிருத்தி செய்யும் பொருட்டு 4,238,165 ரூபா தொகை செலவிடப்பட்டிருந்தது.	கொள்வதற்காக செலவு செய்யப்பட்டது. ஆகையால், இந்த நிதியில் சற்றும் மீதியாக இருக்கவில்லை.
	(ஆ) மீளாய்வு ஆண்டின் மீண்டெழும் செலவினங்கள் தொடர்பாக வரவுசெலவுத்திட்டத்தின் பிராகரம் காணப்படும் செலவை உண்மையான செலவினத்துடன் ஒப்பிடும் போது 9 செலவினத் தலைப்புகள் தொடர்பாக நூற்றுக்கு 17 முதல் நூற்றுக்கு 161 வரை கணிசமானளவு வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன. ஆகையால் வரவுசெலவுத்திட்ட ஆவணம் பயனுள்ள முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.	இதில் ஓய்வூதியப் பணிக்கொடைக் கொடுப்பனவுகளை ஆண்டு ஆரம்பத்தில் சரியாக மதிப்பிட முடியவில்லை. எனினும், ஓய்வூதியப் பணிக்கொடைகள் சட்டத்தின் பிரகாரம், இது செலுத்தப்பட வேண்டும் என்பதால், இதில் ஒரு வித்தியாசம் காணப்படுகின்றது. மேலும், வெளிநாட்டுப் பிரயாணங்கள், வெளிநாட்டுப் பபயிற்சிகள் என்பவற்றுக்கு வெளிநாட்டு அழைப்பு வாய்ப்புகள் 2016 ஆம் ஆண்டில் கிடைக்கும் என்பதால், எமது அதிகார சபையின் முன்கூட்டிய திட்டத்தின் பிரகாரம் இதனை நிறைவேற்ற முடியாது. ஆகையால், அதுவும் வரவுசெலவுத்திட்டத்துடன் வித்தியாசங்களை காட்டுகின்றது.
6	கீழ்காணும் முறைமை மற்றும் கட்டுப்பாட்டுப் பிரிவுகளில் விஷேட கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். கணக்கீடு, நிதிக் கட்டுப்பாடு, கடன்கள் கட்டுப்பாடு, மனித வளங்கள் முகாமைத்துவம், கருத் திட்டங்களை செயற்படுத்துதல், சொத்துக்கள் முகாமைத்துவம் முதலியன அத்தகைய பிரிவுகளாகும்.	கணக்காய்வாளர் அதிபதியினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பிரிவுகள் தொடர்பில் விஷேட கவனத்தைச் செலுத்தி, அவற்றை பொருத்தமான குறிக்கோள்களும், இலக்குகளும் நிறைவேற்றப்படும் வகையில் குறிப்பீடு செய்யப்படுவதற்காகவும் மற்றும் குறித்த குறைபாடுகளை இனங்கண்டு அவற்றை சீர்செய்து கொள்வதற்காகவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

03. அதிகார சபையின் செயலாற்றுகையை மேம்படுத்துவதன் நிமித்தம் மேற்கொள்வதற்கு உத்தேச நடுத்தர கால நடவடிக்கைகள் பற்றிய ஒரு சாரம்சம்

03.1. மின்சக்திக்கான அனுமதிப் பத்திரங்களை விநியோகிக்கும் முறையை இலகுபடுத்த பூகோளத் தரவுகள் முறைமையை இற்றைப்படுத்துதல்.

இலங்கையிலுள்ள மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்கள் தோன்றும் இடங்கள், காலப் பகுதி மற்றும் அவற்றின் அளவு என்பவற்றை அளவிட்டு அபிவிருத்தித் தரப்புகளுக்கு முதலிடும் வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுப்பது இந்த அதிகார சபையின் முக்கிய குறிக்கோளாகும் இது வரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள .அத்தகைய சகல தரவுகளும் மற்றும் தகவல்களும் பொதுமக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக வலைமைப்பினூடாக பெற்றுக் கொள்ளக் கூடிய பூகோளத் தரவு முறைமையினுள் உள்ளீர்க்கப்பட்டுள்ளன.

03.2. சக்தி அபிவிருத்திப் பிரதேசங்களைப் பிரகடனப்படுத்துதல்

இலங்கையில் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்கள் பல பகுதிகளில் காணப்பட்டாலும் கூட அந்த ஒவ்வொரு பகுதியையும் அபிவிருத்தி செய்ய முடியாதுஏனைய . பிற நிலப் பாவனை விடயங்களும் இதற்குக் காரணமாகும்சக்தி அபிவிருத்திப் . பிரதேசங்களைப் பிரகடனப்படுத்துவதனூடாக ஏனைய நிலப் பாவனைஅம்சங்கள் பாதிக்கப்படாத வகையில் காணித் துண்டுகளை மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அபிவிருத்திற்குப் பயன்படுத்தக் கூடிய வாய்ப்பு கிடைக்கும்.

03.3. இலங்கையினுள் சக்திப் பாவனைத் தரவுகளைப் பிரகடனப்படுத்துதல்

1971 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்பட்டு வருகின்ற பல சக்தி மூலங்கள் தொடர்பான அனைத்துத் தரவுகளையும் மற்றும் தகவல்களையும் சேகரித்துத் தயாரிக்கப்பட்ட ஆவணம் தேசிய சக்திக் கணக்காய்வு என அல்லது சக்திச் சமநிலை என அழைக்கப்படுகின்றது. 1990 ஆம் ஆண்டுகள் முதல் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை இந்த நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது. இது வரை, இந்த வருடத்தில் சக்திப் பாவனை தொடர்பான அந்த ஆவணம் இன்டர்நெட்டுடன் இணைந்த தரவுகளை களஞ்சியமாகவும் அதே போன்று அச்சீட்டு வெளியீடாகவும் ஒரு வருட காலத்தினுள் வெளியிடுவதற்கு அதிகார சபையினால் இயன்றுள்ளது.

03.4. காற்று மற்றும் சூரிய சக்தி ஆகிய சக்திகளை அளவிட்டு, அபிவிருத்தி செய்யக் கூடிய பிரதேசங்களை அதனூடாக இனங்காணுதல்

இலங்கையிலுள்ள முக்கிய மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி மூலங்களாக சூரிய சக்தியும் மற்றும் காற்று சக்தியும் இனங்காணப்பட்டிருந்தாலும், அந்த சக்தி மூலங்களின் ஏற்றத்தாழ்வுகள் மற்றும் கால வித்தியாசங்கள் என்பவற்றை அறிந்து கொள்ளாமல் அத்தகைய வளங்களை அபிவிருத்தி செய்வது என்பது கடினமான ஒரு விடயமாகும். ஆகையால், இந்த வளங்களின் வடிவங்களை அளவிடும் பொருட்டு நாடு முழுதிலும் ஒரு பரந்த நீண்டகாலக் கோபுர வலையமைப்பை நிறுவி அபிவிருத்தித் தரப்புகளுக்கு அந்தத் தரவுகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

03.5. மின்சக்தியை நுகரும் உபகரணங்களுக்கு சக்தி முத்திரையிடலை அறிமுகப்படுத்துவது பற்றிய தேவையான ஒழுங்குவிதிகளை விதித்தல்

ஏதாவதொரு மின் உபகரணத்தின் வினைத் திறன் மற்றும் நியமம் ஆகியன தொடர்பான சிக்கல்களை நுகர்வோருக்கு இலகுவில் அறிந்து கொள்ளும் வகையில் சக்தி முத்திரையிடல் CFL மின் குமிழ்களுக்காக அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. கூரை மின்விசிறி, இரட்டை சரிபடுத்தியுடைய குழாய் வடிவ மின் குமிழ்கள் மற்றும் சமப்படுத்தி மின் குமிழ்கள் என்பவற்றுக்கு அந்த சக்தி முத்திரையிடலை அறிமுகப்படுத்தத் தேவையான பூர்வாங்க நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

03.6. மின்சாரத்தை நுகர்கின்ற உபகரணங்களின் சக்தி வினைத் திறனை அளவிடுவதற்கான ஒரு ஆய்வு கூடத்தைத் தாபித்தல்

அதிகளவில் பயன்படுத்தப்படுகின்ற மின்னுபகரணங்களின் வினைத் திறன் மற்றும் ஏனைய நியமங்கள் என்பவற்றை அறிந்து கொள்ளும் வகையில் பல பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு பல ஆய்வு கூடங்கள் நிர்மாணிக்கப் பட்டுள்ளன இந்த .ஆய்வு கூடங்கள் பல்கலைக்கழகங்கள், அரச நிறுவனங்கள் என்பவற்றை அண்மித்து இயங்குகின்றன.

03.7. சக்தி முகாமையாளர்களுக்கும், சக்தி கணக்காய்வாளர்களுக்கும் பயிற்சி அளித்தல்

அதிகார சபையின் சட்ட சட்டஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் பொருட்டு தேவையான தொழில் நுட்ப சேவைகளை வழங்குவதற்கு அந்தத் தொழில் தேர்ச்சியாளர்கள் பலரின் சேவையை இலங்கைக்குப் பெற்றுக் கொடுக்கும் முகமாக இந்தப் பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

03.8. பட்டய சக்திக் கணக்காய்வாளர்களை நியமிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்

மின்சாரத்தை நுகர்கின்ற நிறுவனங்களை கட்டாயம் சக்திக் கணக்காய்வுக்கு உட்படுத்துவதற்கு, தற்போதுள்ள சட்ட ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்த இந்தப் பட்டய சக்திக் கணக்காய்வாளர்கள் பலரின் சேவை அவசியம். எனவே, குழுக்களாக அவர்களுக்கு தொடர்ந்தும் பயிற்சியளிக்கப்படுகின்றது.

03.9. தொழில் நுட்ப மட்ட ஆய்வுக்கான மாற்றுவழி சக்திப் பாடவிதானத்தைத் தயாரித்தல்

மின்சக்தி தொடர்பான அறிவுடைய ஒரு தேசத்தைக் கட்டியெழுப்பும் போது நிலைபெறுதகு சக்தி வளங்கள் மற்றும் அத்தகைய வளங்களின் பாவனை தொடர்பில் எதிர்கால சந்ததியினரை அறிவு வாயந்தவர்களாக மாற்றுவது இதன் நோக்கமாகும்.

03.10. பாடசாலைப் பாடவிதானத்திற்கு சக்திப் பாடத்தை அறிமுகப்படுத்துதல் மற்றும் பாடசாலைச் சக்திக் குழுக்களைத் தாபித்தல்

இது, மின்சக்திப் பாவனை தொடர்பில் காணப்படுகின்ற சிக்கல் வாய்ந்த விடயங்களை அறிந்து கொள்வதற்கும் அதே நேரம் செயன்முறை ரீதியான அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் மாணவர்களைப் பரிட்சயப் படுத்தும் ஒரு நிகழ்ச்சித் திட்டமாகும்.

03.11. பல்கலைக்கழங்களிலும் மற்றும் ஆராய்ச்சி நிறுவகங்களிலும் மின்சக்தி தொடர்பான ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு உதவுதல்

இலங்கையில் காணப்படும் பல்கலைக்கழகங்கள், கல்வி சார் நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி சார்ந்த நிறுவனங்கள் என்பவற்றை மின்சக்தி தொடர்பான ஆராய்ச்சி அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுத்துதல் மற்றும் கள ரீதியில் தேசிய முக்கியத்துவத்தின் நிமித்தம் அத்தகைய நிறுவனங்களை ஆயத்தப் படுத்துதல் இதன் நோக்கமாகும்.

03.12. சிறிய கைத்தொழில்களின் நிலையை மேம்படுத்தும் பொருட்டு சக்தி மைய மேம்பாட்டு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துதல்

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியினது முக்கியமான உபாயமாக கருதப்படும் சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களின் உற்பத்தித் திறன் பற்றிய மனோபாவத்தை மாற்றுவது இதன் நோக்கமாகும்.

03.13. சக்தி சார்ந்த கல்வி நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல்

2016 ஆம் ஆண்டு பிராந்திய, மாகாண, தேசிய மட்டங்களில் மதிப்பீடுகளின் முன்னேற்றங்களை மீளாய்வு செய்து அதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் எதிர்காலத்தில் செயற்படுத்தப்படவுள்ளது.